بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/11/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

- ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு
- உலகின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு துஆவின் பக்கம் கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹுதைபியாவைக் குறித்து கூறப்பட்டு வந்தது. புதைல் பின் வர்கா குஸாயீ மற்றும் பிற குரைஷிய தூதுவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்ததைக் குறித்தும் குறிப்பு காணப்படுகிறது. இதைப்பற்றிய விபரத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியா பள்ளத்தாக்கை அடைந்து முகாமிட்ட பிறகு குஸாஆ கோத்திரத்தின் பிரபல்யமான தலைவரான புதைல் பின் வர்கா என்பவர் தம் தோழர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க வந்தார். மக்கத்து தலைவர்கள் போருக்காக ஆயத்தமாக நிற்கிறார்கள். தாங்கள் மக்காவில் நுழைவதை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நாம் போர் செய்யும் நோக்கத்தோடு வரவில்லையே! உம்ரா செய்வதற்காகத்தான் வந்துள்ளோம். மக்கத்து குரைஷியர்களை போரின் நெருப்பு சுட்டு சாம்பலாக்கி விட்ட போதிலும் அவர்கள் தவிர்ந்திருப்பதில்லையே! அவர்கள் என்னுடன் போர் நிறுத்தம் செய்து கொண்டு என்னை சுதந்திரமாக விட்டு விடுவார்கள் என்றால் இந்த சமரசத்திற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஆனால் அவர்கள் எனது இந்த ஆலோசனையை நிராகரித்து போர் நெருப்பை தூண்டிக் கொண்டே இருந்தால், எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! ஒன்று, என் உயிர் இவ்வழியில் அர்ப்பணமாகி விட வேண்டும் அல்லது இறைவன் எனக்கு வெற்றி தந்து விட வேண்டும். அதுவரையிலும் நானும் அவர்களுக்கெதிராக நிற்பதை விட்டு பின் வாங்க மாட்டேன். நான் அவர்களுக்கெதிராக நின்று அழிந்து விடுவேன் என்றால் இக்கதை முடிவுக்கு வந்துவிடும். ஆனால் இறைவன் எனக்கு வெற்றியை வழங்குவான் என்றால், நான் கொண்டு வந்த மார்க்கத்திற்கு வெற்றி கிடைத்துவிடும் என்றால், பிறகு மக்காவாசிகள் தாம் ஈமான் கொள்வதிலிருந்து அவர்களுக்கு எவ்வித தயக்கமும் இருக்கக் கூடாது என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் வேதனையுடன் கூடிய கலப்பற்ற இச்சொற்பொழிவு புதைல் பின் வர்கா மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் மக்கா சென்றடைந்து பெருமானார் (ஸல்) அவர்களின் சமாதான ஆலோசனையைக் குறித்து குரைஷியர்களுக்கு தகவல் தெரிவித்தார். அப்போது சகீஃப் எனும் கோத்திரத்தின் செல்வாக்கு மிக்க தலைவரான உர்வா பின் மஸ்ஊது என்பவர், முஹம்மது (ஸல்) அவர்களின் இந்த ஆலோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு, மக்களே! நீங்கள் எனக்கு அனுமதி தாருங்கள். நான் உங்கள் சார்பாக முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று மேற்கொண்டு பேசுகிறேன் என்று கூறினார்.

இவர் பெருமானார் (ஸல்) அவர்களையும் சஹாபிகளையும் மக்கத்து வாசிகளைக் கொண்டு அச்சுறுத்த முயற்சி செய்தார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சில் உமிழும் போதெல்லாம் சஹாபிகள் அதை தம் கைகளில் ஏந்திக்கொண்டு அதை தம் முகத்திலும் நெஞ்சிலும் தடவிக் கொள்வதை அவர் கண்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு ஏதேனும் கட்டளையிட்டால் அவர்கள் உடனடியாக அதை நிறைவேற்றி கொடுப்பதையும், பெருமானார் (ஸல்) அவர்கள் உளூ செய்யும் போது சஹாபிகள் அந்த உளூவின் தண்ணீரை பெறுவதற்கு ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வதையும் கண்டார். சஹாபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு முடியை கூட கீழே விழ விட்டதில்லை. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் தம் குரலை தாழ்த்திக் கொள்வார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்ட கண்ணியத்தின் காரணமாக சஹாபிகள் அன்னாரை ஓரக் கண்ணால் கூட பார்க்க மாட்டார்கள்.

அவர் குரைஷியர்களிடம் திரும்பிச் சென்றார். என் மக்களே! நான் தூதுவனாக மன்னர்களின் அவைகளுக்கும், ஈரான் ரோம் மற்றும் அபிசீனியா அரசவைகளுக்கும் சென்றுள்ளேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அவர்களின் தோழர்கள் எவ்வாறு கட்டுப்படுகிறார்களோ அவ்வாறு ஓர் அரசனுக்கு கட்டுப்படுவதை நான் எங்கும் கண்டது கிடையாது என்று கூறினார்.

இந்த நபர் காஃபிர்களைக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களை அச்சுறுத்த வந்திருந்தார். ஆனால் இந்த காட்சிகளைக் கண்ட பிறகு அவரே தாக்கத்திற்குள்ளாகி சென்றார். பிறகு அவர் இவ்விஷயங்களை காஃபிர்களிடமும் எடுத்துக் கூறினார்.

பிறகு அஹாபீஷ் உடைய தலைவர் ஹுலைஸ் பின் அல்கமா கினானீ என்பவர் குரைஷியர்களின் பிரதிநிதியாக வந்தார். பெருமானார் (ஸல்) அவர்களை அந்த நபர் மேடான பகுதியில் இருந்து பார்த்த போது பெருமானார் (ஸல்) அவர்கள், இவர் இன்ன நபர் ஆவார். குர்பானி விலங்குகளுக்கு கண்ணியமளிக்கக்கூடிய கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார் என்று சஹாபிகளைப் பார்த்து கூறியவாறு, குர்பானியின் விலங்குகளை அவருக்கு காட்டும் வகையில் அவற்றை கடந்து போகச் செய்யுங்கள் என்றார்கள். அவர் அவற்றை கண்டபோது, சுப்ஹானல்லாஹ்! இவர்கள் பைத்துல்லாஹ்வை விட்டு தடுக்கப்படுவது பொருத்தமற்ற செயல் ஆகும் என்று கூறிவிட்டு லக்ம், ஜுஸாம், கின்தஹ் மற்றும் ஹிம்யர் ஆகிய கோத்திரங்கள் ஹஜ் செய்து கொள்ளட்டும் என்றும் அப்துல் முத்தலிபின் பிள்ளைகளை பைத்துல்லாஹ்வை விட்டு தடுக்க வேண்டும் என்றும் அல்லாஹ் அனுமதி வழங்கவில்லை. கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! குரைஷியர்கள் அழிந்து போவார்கள். சந்தேகத்திற்கிடமின்றி இம்மக்கள் உம்ரா செய்வதற்காகத்தான் வந்துள்ளார்கள் என்று கூறினார். இவ்விஷயங்களை கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! பனூ கினானாவின் சகோதரரே! (எங்களைக் குறித்து) உங்களுடைய கருத்து முற்றிலும் சரியே என்று கூறினார்கள். அவர் குரைஷியர்களிடத்தில் இந்த அனைத்து சூழ்நிலைகளையும் எடுத்துக் கூறிய போது அவர்கள் இவரை கிராமவாசியாகக் கருதிக் கொண்டு அவரிடம், நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் எதைக் கண்டீரோ அவை, நஊதுபில்லாஹ்! அவர்களின் ஏமாற்று வேலையே ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் உஜ்ரா அவர்களுக்கு ஏற்பட்டிருந்த துன்பத்தின் காரணமாக அப்பயணத்தில் இஹ்ராமுடைய நிலையில் தலையை மழித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கிடைத்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. அவ்வாறே, குரைஷியர்கள் சார்பாக பல்வேறு மக்கள் தூதுவர்களாக வந்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. அவர்களுள் மிக்ரிஸ் பின் ஹஃப்ஸ் என்ற நபரும் ஒருவர் ஆவார். இவர் வந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் இவரைக் கண்டு, இவர் ஓர் ஏமாற்றுக்காரர் ஆவார் என்று கூறினார்கள். அறிவிப்பில் ஃபாஜிர் (தீயவன்) என்ற சொல்லும் காணக் கிடைக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் உர்வா மற்றும் புதைல் ஆகியோருடன் என்ன பேசினார்களோ அதே விஷயத்தைத்தான் இவருடனும் பேசினார்கள். பிறகு இவர் தம் தோழர்களிடத்தில்

திரும்பினார். பெருமானார் (ஸல்) அவர்கள் இவருடன் பேசிய விஷயங்களைக் குறித்து அவர்களிடத்தில் தெரிவித்தார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கிராஜ் பின் உமய்யா அவர்களை தம் தூதுவராக குரைஷியர்களை நோக்கி அனுப்பி வைத்ததைக் குறித்தும், அவர்களுடன் குரைஷியர்கள் மோசமாக நடந்து கொண்டதைப் பற்றியும், அவர்களை கொலை செய்ய முயற்சி செய்ததைப் பற்றியும் குறிப்பு காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் குரைஷியர்கள் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அதை கண்டும் காணாமல் கடந்து கொண்டிருந்தார்கள். குரைஷியர்கள் ஆவேசத்தில் பெருமானார் (ஸல்) மற்றும் சஹாபிகள் மீது தாக்குதல் நடத்தவும் எண்ணம் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்யவும் சூழ்ச்சி செய்தனர். ஆனால் முஸ்லிம்களின் விழிப்புணர்வின் காரணமாக இந்த சூழ்ச்சி தோல்வியடைந்தது. அவ்வாறிருந்த போதிலும், பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்கள் அனைவரையும் மன்னித்து விட்டார்கள். சமாதானத்திற்கான முயற்சியை தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

அல்லாமா பைஹகீ அவர்கள் உர்வாவிடமிருந்து அறிவிக்கிறார்கள்: பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் குரைஷியர்களின் பக்கம் அனுப்பி வைப்பதற்காக ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை அழைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! குரைஷியர்கள் எனது எதிர்ப்பைக் குறித்து அறிவார்கள். ஆகவே எனக்கு என் உயிரைப் பற்றிய அச்சம் உள்ளது. (அதாவது, தங்களின் தூதுச் செய்தியை முழுமையாக எட்ட வைக்க எனக்கு அவகாசம் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது). என்னை பாதுகாக்கும் அளவுக்கு பனூ அதீயில் எந்த ஒரு நபரும் கிடையாது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் விரும்புகிறீர்கள் என்றால் நான் செல்கிறேன். ஆனால் நான் தங்களிடத்தில் எப்படிப்பட்ட ஒரு நபரைப் பற்றி கூற விரும்புகிறேன் என்றால், மக்காவில் என்னை விட அவருக்கு அதிக கண்ணியம் உள்ளது. அவர் மிகப் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவராவார். அந்த குடும்பத்தார்கள் அவரை பாதுகாப்பார்கள். தாங்கள் விரும்புகின்ற தூதுச் செய்தியை அம்மக்களுக்கு அவர் கொண்டு சேர்ப்பார். அவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) ஆவார் என்று கூறினார்கள். ஆகவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தூதுவராக மக்காவுக்கு சென்றார்கள். குரைஷியர்களின் கூட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை எடுத்து வைத்தார்கள். முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவில் நுழையக் கூடாது என்ற பிடிவாதத்தில் குரைஷியர்கள் நிலைத்திருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விரும்பினால் தனிப்பட்ட முறையில் அவர்கள் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்து கொள்ளலாம் என்று குரைஷியர்கள் அவருக்கு முன்னால் இக்கோரிக்கையை எடுத்து வைத்தனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களோ இதை மறுத்தவாறு, பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு வெளியே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் நான் தவாஃப் செய்வதா? அது ஒருபோதும் நடக்காது என்று கூறி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கோரிக்கையை குரைஷியர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. இறுதியாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவநம்பிக்கையடைந்து திரும்பி வருவதற்கு ஆயத்தம் மேற்கொண்டார்கள்.

அச்சந்தர்ப்பத்தில் மக்காவின் சில விஷமிகளிடத்தில் ஒரு விஷமத்தனம் தோன்றியது. அது என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் மக்காவில் நாம் தடுத்து நிறுத்திக் கொண்டால் (நிகழப்போகின்ற) சமரசத்தில் நமக்கு அதிக பயன்களை தரக்கூடிய நிபந்தனைகளை நாம் வகுத்துக் கொள்ளலாம் என்று கருதி அவர்கள் இவ்வாறு செய்திருக்கலாம். மக்கத்தினர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்து விட்டார்கள் என்ற வதந்தி அப்போது முஸ்லிம்களிடத்தில் பரவி விட்டது. இந்தச் செய்தி பெருமானார் (ஸல்) அவர்களை வந்தடைந்தபோது அன்னாருக்கு கடும் கோபமும், வேதனையும் ஏற்பட்டது. அன்னார் உடனடியாக அனைத்து முஸ்லிம்களிடத்திலும் அறிவிக்கச் செய்து அவர்களை ஒரு கருவேல மரத்தின் கீழ் ஒன்றுகூடச் செய்தார்கள். அவர்களிடம்,

நமக்கு கிடைத்த செய்தி உண்மையானது என்றால், இறைவன் மீது ஆணையாக! உஸ்மான் அவர்களுக்காக பழிக்கு பழி வாங்காத வரை நாம் இந்த இடத்தை விட்டு நாம் நகர மாட்டோம் என்று கூறினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம், வாருங்கள்! என் கை மேல் கை வைத்து இஸ்லாமிய வழிமுறைப்படி பைஅத் செய்யுங்கள். உங்களில் எவரும் புறமுதுகு காட்ட மாட்டீர்கள் என்றும், நீங்கள் உங்கள் உயிரை பணயம் வைத்தாலும் சரி! எந்நிலையிலும் தம் இடத்தை விட்டு விலக மாட்டீர்கள் என்றும் உறுதிமொழி கூறுங்கள் என்று கூறினார்கள்.

அந்த பைஅத் நடந்து கொண்டிருக்கும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் தம் இடது கையை வலக்கையின் மேல் வைத்து இது உஸ்மானுடைய கையாகும்; ஏனென்றால் அவர் இங்கே இருந்திருப்பார் என்றால் இந்த பரிசுத்த வியாபாரத்தில் அவர் எவரை விடவும் பின்தங்கி இருக்க மாட்டார் என்று கூறினார்கள். இஸ்லாமிய வரலாற்றில் இந்த பைஅத், பைஅத்தே ரிஸ்வான் என்ற பெயரில் பிரபல்யமடைத்துள்ளது. அதாவது முஸ்லிம்கள் இறைவனுடைய முழுமையான விருப்பத்தை பெற்ற பைஅத் ஆகும். திருக்குர்ஆனிலும் இந்த பைஅத்தைப் பற்றி சிறப்பான குறிப்பு காணப்படுகிறது. இந்த பைஅத்தை அதன் எல்லா அம்சங்களுடன் சேர்ந்து பார்க்கும் போது இது ஒரு மாபெரும் வெற்றியாக இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. வருங்காலத்தில் நிகழ இருந்த வெற்றிகளின் கதவுகளை இது திறந்தது மட்டுமின்றி முஹம்மதிய மார்க்கத்தின் மையக் கருத்தாக இருக்கும் இஸ்லாமிய தியாகத்தின் ஆன்மாவை மகத்துவமான முறையில் இது வெளிப்படுத்தியது.

*ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பாக இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்தில் எடுத்துரைப்பேன் என்று கூறிய பிறகு ஹுஸூர் அவர்கள் குத்பாவின் இறுதியில் உலகின் தற்போதைய சூழ்நிலையை முன்னிறுத்தி துஆவின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* இப்போது நான் இவ்விஷயத்தையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்; அனைவரும் அறிந்தது போன்று ஐரோப்பாவிலும் சூழ்நிலை மிக வேகமாக போரின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போர் விரிவடையக் கூடிய அபாயம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்கும் மிரட்டல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அறிவுடைய அநேக மக்களும், சமாதானத்தை விரும்பக்கூடிய மக்களும் தலைவர்களும் இதைக் குறித்து கவலையில் உள்ளார்கள். எவ்வாறிருப்பினும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அஹ்மதிகளையும், அமைதியை விரும்பக்கூடிய மக்களையும் போரின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பானாக! வருங்கால சந்ததிகள் பாதிப்பிற்காளாகக் கூடிய அளவிலான ஆயுதங்களை இவர்கள் போரில் பயன்படுத்தாமல் இருக்கட்டுமாக!

முஸ்லிம் நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. உண்மையை அடையாளம் காணக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக! இன்னொரு விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன்; அது என்னவென்றால், சூழ்நிலைகள் மிக வேகமாக சீர்குலைகிறது; சீர்குலைந்து கொண்டே செல்கிறது. ஆகவே மீண்டும் நினைவூட்டும் வகையில் நான் கூறிக் கொள்வதென்னவென்றால், இவ்வாறான சூழ்நிலையில் வீடுகளில் இரண்டு மூன்று மாதங்களுக்கான உணவுப் பொருட்களை வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். ஆனால் அனைத்தையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்! அவனுடைய விருப்பத்தை பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்! அவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயலுங்கள்! அதில் முன்னேறுவதற்கு முயலுங்கள்!

அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)